தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# மதுரை மாவட்ட செய்திகள்



## மதுரை ஐகோர்ட்டு நுழைவு வாயிலில் வக்கீல்கள் ஆர்ப்பாட்டம்

மதுரை, ஜூலை.5-

மதுரை ஐகோர்ட்டு நுழைவு வாயிலில் வக்கீல்கள் சங்கங்களின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் பல்வேறு மாற்றங்களுடன் அமல்படுத்தப்பட்டு உள்ள 3 குற்றவியல் சட்டங்களுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. போலீசாருக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் இந்த சட்டங்களை உடனடியாக நிறுத்தி வைக்கவேண்டும் என்றும் இந்த சட்டங்களால் பொதுமக்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவார்கள் என்றும் கோரிக்கை கோஷங்களை வக்கீல்கள் எழுப்பினர். மேலும் இந்த சட்டங்களால் கோர்ட்டில் கூடுதலாக வழக்குகள் தேங்கும் நிலை ஏற்படும் என்றும் வக்கீல்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் எம்.எம்.பி.ஏ. வக்கீல் சங்கத்தலைவரும், மூத்த வக்கீலுமான ஐசக் மோகன்லால், செயலாளர் எம்.சரவணகுமார், துணை செயலாளர் எஸ்.வினோத் உள்ளிட்டவர்களும், எம்.பி.எச்.ஏ.ஏ. சங்க தலைவர் ஆண்டிராஜ், செயலாளர் அன்பரசு உள்ளிட்டவர்களும், மூத்த வக்கீல்கள் அஜ்மல்கான், ஹென்றி டிபென், அருள்வடிவேல்சேகர், முத்துகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.